திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Ethnic Society and Government Formation

Dr. N. Vennila

Associate professor, Department of Tamil, Krishnasamy College Science Arts and Management for women, Cuddalore, India

Manuscript ID : **MT111A0109**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 29.12.2022
Revised: 31.01.2023
Accepted: 08.02.2023
Published: 10.02.2023

Pages : 34-48

DOI: 10.5281/zenodo.7627560

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

ABSTRACT:

The Thinaikudis who lived in kumarikandam made tools from strong black stone amoothly sharply, The doing is the changed life. The intellentual development of the ancient tamil can be feltas the sense of beauty that hides the void and the simple way of searching for food by nature. Early humans did not have a unified stable social structure. Did not start your life as a nomad? They live without limits for life and their emotions. It took time for them to carve out a formal life. In the development of time, the human race reached the stage of cultural civization and lived a highquality life in unity with the ethnic group is a combination of the structure of society. Cultural systems and places where people live. When this group has a fully structured social and cultural life, group leaders are formed to run this society.

KEYWORDS:

Agriculture, Residence, Field, Class, Tribal Leaders, Pannan, Aruman, Social structure

இனக்குழுச் சமூகமும் அரசு உருவாக்கமும்

முனைவர். ந. வெண்ணிலா,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி, கடலூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

குமரிக்கண்டத்தில் வாழ்ந்த திணைக்குடிகள் கருவிகளை வலிமையான கருங்கற்களால் வழவழப்பாகவும் கூர்மையாகவும் செய்துக்கொண்ட நிலையே திருந்திய வாழ்வியலாகும். இயற்கையின் வழி உணவு தேடித் திரிந்தும் எளிய முறையில் உறைவிடம் அமைத்தல் அற்றம் மறைத்தும் அழகுணர்ச்சி தோன்றியதுமாய் பண்டைத் தமிழர்களின் அறிவுநிலை வளர்ச்சியை உணரமுடிகிறது. தொடக்ககால மனிதர்கள் ஒன்றுபட்ட நிலையான சமூக அமைப்பினைப் பெற்றிருக்கவில்லை. நாடோடிகளாக மனம் போன போக்கில் வாழ்வியலை தொடங்கினார். வாழ்க்கைக்கென்றும் தம் உணர்ச்சிகளுக்கென்றும் வரையறையில்லாமல் வாழ்ந்தனர். அவர்கள் முறைப்பட வாழ்க்கையை வகுத்துக் கொள்வதற்கு காலங்கள் ஆகின. கால வளர்ச்சியில் மனித இனம் பண்பாட்டு நாகரீக நிலையை அடைந்த காலத்தையும் இனக்குழுவோடு ஒன்றுபட்டு உண்டு வாழ்ந்த உயர்ப்பண்புடைய வாழ்வியலையும் வாழ்ந்தனர். சமுதாயத்தின் அமைப்பு பண்பாட்டு அமைப்புகள் மனிதர்கள் வாழும் இடங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக இனக்குழு அமைகிறது. இக்குழுவினர் ஒரு முழு கட்டமைப்பினை உடைய சமூகப் பண்பாட்டு வாழ்வினை மேற்கொண்ட போது இச்சமூகத்தை நடத்திச்செல்லும் வகையில் குழுத்தலைமைகள் அமைகின்றன.

கருச்சொற்கள்

வேளாண்மை, குடியிருப்புகள், புலம், வர்க்கம், இனக்குழுத்தலைமைகள், பண்ணன், அருமன், சமூக கட்டமைப்பு

முன்னுரை

குமரிக்கண்டத்தில் வாழ்ந்த திணைக்குடிகள் கருவிகளை வலிமையான கருங்கற்களால் வழவழப்பாகவும் கூர்மையாகவும் செய்துக்கொண்டநிலையே திருந்திய வாழ்வியலாகும். பண்டைக்குடிகள் வாழ்ந்த இடம் குறிஞ்சியும் அதை அடுத்த நிலையில் இருக்கக்கூடிய முல்லையும் ஆகும். வாழ்க்கைத்திறத்தால் இயற்கையாகவே அவர்கள் செய்த தொழில் கால்நடைகளை வளர்த்தல்

வானாவாரிப்பயிர் விளைவித்தலும் செய்துள்ளனர். மலையடிவாரங்களில் வாழும் ஆடு, மாடு, எருமை ஆகிய மூன்று விலங்கினங்களையும் பிடித்துப் பழக்கி வீட்டு விலங்காக்கினர். மூன்றும் பால் தந்தன. ஆடு பால் தருவதோடு ஊனுணவுமாக்கினர். காளைமாடும் கடாஎருமையும் உழவு செய்வதற்கும், காட்டுப்பன்றியையும் முயலையும் உடும்பையும் பிடித்து ஊனுணவிற்குப் பயன்படுத்தினர். பன்றி இறைச்சி உண்பவர் ஒருசாரார் இருந்துள்ளனர். அவர்களில் ஒருசாரார் மாட்டு இறைச்சி உண்டனர். பறவைகள் கோழி, புறா, குயில், காடை ஆகியவற்றின் ஊனினை விரும்பியுண்டனர். காட்டுக்கோழியைப் பழக்கி வீட்டுக்கோழி ஆக்கினர்.

மரம், மலை, நீர் நிலைகளில் ஆவி, பேய் இருப்பதாக நம்பினர். இறந்தவரின் உடம்பைச் சற்றுத் தொலைவான இடத்தில் குழியில் புதைத்தனர். இறந்தவரின் உடலை காகம், நரி, கழுகு, ஓரி போன்றவை தின்னாதவாறு மண்ணால் மூடினர். இவ்வாறு இயற்கையின் வழி உணவு தேடித் திரிந்தும் எளிய முறையில் உறைவிடம் அமைத்தல் அற்றம் மறைத்தும் அழகுணர்ச்சி தோன்றியதுமாய் பண்டைத் தமிழர்களின் அறிவுநிலை வளர்ச்சியை உணரமுடிகிறது.

நிலத்தைப் பண்படுத்தல்

மழையின் பயனால் பயிர்கள் விளைந்தன. இவை வானாவாரிப் பயிர்கள் என்றழைக்கப்பட்டன. ஏர்க்காடும் கொத்துக்காடுமாகிய நிலத்தில் மழையினால் விளைந்த தினை வரகு போன்ற சிறுதினைகளும் அவரை, துவரை போன்ற பயறு வகைகளும் பயன்படுத்தினர். புல்வெளிகளாக உள்ளவற்றைக் கால்நடை மேய்ச்சலுக்கு விட்டுவைத்தனர். குறுங்காடும், பெருங்காடுமாயுள்ளவற்றைத் தீயினால் சுட்டெரித்துக் கொன்று விளைநிலமாக்கிய இடங்கள் “கொல்லை” எனப்பட்டது. அடர்ந்த மரஞ்செடி கொடிகளால் இருண்டு விடாமல் வெட்ட வெளியான நிலங்கள் புலப்பட்டமையால் “புலம்” என்று பெயரிட்டனர்.

“புலந்தொறும் மரப்பிய தேரின ராயினும்” (புறம். 109)

“புலங்கெட வளுக்கும் வரம்பில் தானை” (புறம். 14)

நிலத்தை உழவதற்குக் கலப்பையையும், வேட்டையாடுவதற்கு வளரி என்னும் வளைந்த தடியையும், கவண், வில் முதலிய கருவிகளையும் கையாண்டனர். கல்லோடு, மரக்கொம்பு, தந்தம், எலும்பு முதலியனவற்றை முதன்மைக் கருவிகளாகப் பயன்படுத்தினர். மாட்டுக் கொம்பும் யானை தந்தம் முதலியன வளைத்தடியாகப் பயன்படுத்தினர். அவை அதிகளவு கிடைக்காத தருணத்தில் வளைந்ததடிகளைப் பயன்படுத்தினர்.

வாழ்வியல் தேவைகள்

உடுக்க மரவுரி போன்று நாரால் ஆன ஆடையும். போர்த்திக்கொள்ள ஆட்டுமயிர்க் கம்பளியும் முதலில் கைப்பின்னலாகவும் பின்பு தறிநெசவாகவும், ஆடைகளைத்தயார் செய்து கொண்டனர். உறங்குவதற்கு மூங்கில், ஓலைப்பாய் முடைந்து பயன்படுத்தினர். சந்தனம், வண்ணச் சாந்துகள் கொண்டு ஆண் பெண் இருபாலரும் பயன்படுத்தினர். பெண்கள் ஓவியம் வரைந்துக் கொள்ளுதல் அழியாமல் இருக்க பல்வேறு உருவங்களைப் பச்சை குத்திக் கொள்வதையும் பெரும் வழக்கமாகக் கொண்டனர்.

குடியிருப்புகள்

குடியிருக்க வட்டமான கூரை வீடுகளைக் கட்டினர். முதலில் மரத்திலும் மரத்தடியிலும் வாழ்ந்து வந்ததனால் வட்டமாகக் கிளைகள் படர்ந்தும் நிலத்தில் படிந்துள்ள மரத்தின் பொந்துகளிலும் வீட்டின் வடிவினை அமைத்தனர். வீட்டைச் சுற்றி கற்களால் சுவர் எழுப்பினர். மண் சாந்தைப் பயன்படுத்தி கற்சுவர்கள் அமைத்தனர். கல் இல்லாமலும் மண்ணால் சுவர் அமைத்தனர். தானியங்கள் காய்கறிகள் கொட்டி வைப்பதற்கு பனைநாரால் பெட்டிகளும் மூங்கில் கூடைகளும் முடையப்பட்டன. நீரையும் நீர்ப்பொருள்களையும் வைப்பதற்கு மூங்கில் நாழியும் மரத்தின் அடிப்பாகத்தையும் ஆட்டுத்தோலையும் பயன்படுத்தினர். சமைப்பதற்குக் கற்களால் கலம் செய்து கொண்டனர்.

ஆடு, மாடு உடும்பு முதலியவற்றின் தோலை மரத்திலும் கலத்தின் வாயிலும் கட்டி உலத்தி துடி, தொண்டகம் போன்ற தோலிசைக் கருவிகளைக் கண்டறிந்தனர். வண்டினால் துளைக்கப்பட்ட மூங்கில் குழாயின் நாணல் தண்டிலும் காற்றுபுகுந்து ஒலியெழுப்பியதைக் கண்டு புல்லாங்குழலையும், இது போன்ற அனுபவங்களால் வில், யாழ் என்னும் நரம்பிசைக் கருவிகளையும் கண்டறிந்தனர். இவ்வாறு சிறு சிறு அனுபவங்களால் புது நாகரீக வாழ்க்கையை அறிந்து கொண்ட மாந்தர்கள் களவு, கற்பு வாழ்க்கையையும் அறத்தின் வழி வாழ்வியல் நெறி முறைகளோடு வாழ்ந்துள்ளனர்.

வேளாண்மையின் தொடக்கம்

கால ஓட்டத்தால் அன்றாட நிகழ்வுகளில் ஏற்படும் மாற்றங்களைக் கண்ட பண்டைத்தமிழர் நிலையான வாழ்வின் முக்கியத்துவத்தைக் கற்றுக் கொண்டனர். ஆற்றங்கரையோரம் குடிகள் நாகரீக வளர்ச்சியினை அடைந்தனர். நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு நிலையான வாழ்வியலைத் தொடங்கினர். ஆற்றுநீர் உதவியோடு வேளாண்மையைத் தொடங்கினர். எருமைக்கடாக்களைக் கொண்டு உழவு செய்தனர். உழுதும் உழவித்தும் வாழ்ந்த இரு பிரிவினைகள் உருவானது. நெல், பயறு

உணவு தானியங்கள் சிறப்பாக விளைந்தன. நாளடைவில் இவர்களது முக்கியத்தொழிலாக வேளாண்மை நிலைப்பெற்றது.

> **நீர்வளம் தன்னால் வயல்வளம் மிகுத்தே**
> **சீர் வலம் சிறந்தொளிர் செல்வநல் மருதமும்** (ஐங்கு. 5)

என்று ஐங்குறுநூறு கூறுகின்றது.

மருத நிலத்தவர் மழையின் இன்றியமையாமையை உணர்ந்திருந்தனர். நிலம், வயல், பழனம், கழனி என்ற பெயர்களால் வழங்கப்பட்டது. மருதநிலத்தில் நீர்நிலைகள் துறைகள், உண்டுறை, தண்டுறை, மணித்துறை, பெருந்துறை என்றழைக்கப்பட்டன. வெண்ணெல், செந்நெல், புல்லரிசி இவர்களது உணவாக அமைந்தது. நெய்தல் நிலத்தில் விளைந்த உப்பையும் மீனையும் பண்டமாற்று செய்து கொண்டனர்.

வர்க்கச் சமுதாயம்

தமிழ்ச்சமூகத்தில் ஐவகை நிலம் சார்ந்த இனக்குழுச் சமுதாயத்தைக் கடந்து வர்க்கச் சமுதாயம் தோன்றியது. உண்போர் உழுவோர் எனப் பல்வேறு வர்க்கப் படிநிலைகள் வரலாற்றுப் போக்கில் அமைந்து விட்டதனைச் சங்க இலக்கியம் எடுத்துக்காட்டுகிறது. சமுதாயத்தைக் கட்டமைத்து கடலையும், ஆற்றையும் வென்று ஆளுமைச் செலுத்தினர் என்பதைச் சங்க இலக்கியம் காட்டுகின்றது.

மேலும், பண்டைத்தமிழர்கள் விண்கோள்களையும் அவற்றின் நிலைமாற்றங்களையும், பருவமாற்றங்களையும், கண்டறிந்தனர். வேளாண்மை, வாணிபம், கைத்தொழில் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தினர். போர், ஆடல், பாடல், ஓவியம், கட்டடம், அணை, புனைதெப்பம், ஓடம், நாவாய், கப்பல் கட்டுதல், பானைவனைதல், நெசவு, உழுக்கருவிகள், போர்க்கருவிகள் படைத்தல் போன்று பல்வேறு கலைகளையும் கற்றுத் தேர்ந்தனர் என்பதையும் சங்க இலக்கியங்கள் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

மனித சமுதாய வரலாறு ஒவ்வொரு சமுதாயத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அரசு என்பது இருந்ததில்லை என்பதை சங்க இலக்கியம் காட்டுகின்றது. பழங்குடிக் குழுக்களும், குல அமைப்புகளும் இருந்து மக்கள் கூட்டங்களை நெறிப்படுத்தி வழிகாட்டின. அவை சமுதாயத்திற்கு வழிகாட்டியாகவும், வாழ்வியல் நெறிப்படுத்துவதற்கான விதிகளையும், உறவுகளையும், ஒழுகலாறுகளையும், பண்புகளையும் படைத்துக்கொண்டது. அரசு தோன்றிய பிறகு அவை அறநெறிகளாகவும், பழக்க வழக்கங்களாகவும், காலத்திற்கேற்ப மாறின. உழைப்பு, நேர்மை, அறம், வாய்மை, உண்மை, இன்னா செய்யாமை, ஒப்புரவு போன்ற பண்புகள்

எல்லாம் உருப்பெற்றுத் தொடர்ந்து வந்தன. இரும்பு கண்டுபிடிப்பும், வேளாண்மையும் அதன் பயன்பாடும் நாகரிகத்தையும் வர்க்கச் சமுதாயத்தையும் தோற்றுவித்தது. அந்த உண்மையை பண்டைய இலக்கியங்கள் சான்றுகாட்டுகின்றன. பண்டைக் காலத்தில் வேளாண்மையும் கைவினைத் தொழில்களும் வாணிபமும் கைகோர்த்து இணைந்து வளர்ந்தன.

இனக்குழுக்களும் தலைமைகளும்

தொடக்ககால மனிதர்கள் ஒன்றுபட்ட, நிலையான சமூக அமைப்பினைப் பெற்றிருக்கவில்லை. நாடோடிகளாக மனம் போன போக்கில் வாழ்வியலை தொடங்கினார் வாழ்க்கைக்கென்றும், தம் உணர்ச்சிகளுக்கென்றும் வரையறையில்லாமல் வாழ்ந்தனர். அவர்கள் முறைப்பட வாழ்க்கையை வகுத்துக் கொள்வதற்கு காலங்கள் ஆகின. கால வளர்ச்சியில் மனித இனம் பண்பாட்டு நாகரீக நிலையை அடைந்த காலத்தையும், இனக்குழுவோடு ஒன்றுபட்டு உண்டு வாழ்ந்த உயர்ப்பண்புடைய வாழ்வியலையும் வாழ்ந்தனர்.

பண்டைக்காலச் சமூகத்தில் மூலதனத்தை ஒரே இடத்தில் குவிக்கவில்லை. அனைவருக்கும் கிட்டும்வகையில் அமைந்தது. பண்டைக் காலத்தில் பெண்கள் மேன்மைப் படுத்தப் பட்டனர். கல்வியில் பெண்கள் சிறந்திருந்தனர். திணைக்குடிகள் தத்தம் பொறுப்புகளை இயல்பாக மேற்கொண்டனர். ஆடவர்க்கு வினையே உயிர் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தம் பிறவிப் பயன் இதுவே என்று எண்ணினர். ஒருவர் மற்றொருவரை அடிமைப்படுத்தும் நிலையில்லை. இதனால் குடிகள் ஒழுக்க நெறியோடு வாழ்ந்தனர்.

குலக்குழு அமைப்புடைய சமுதாயங்கள் அனைத்தும் சமத்துவச் சமுதாய அமைப்பைக் கொண்டவை. மக்கள் அனைவரும் ஒரே விதமான தகுதியைப் பெற்றிருப்பர். தனிப்பட்டோர் சொத்து என்னும் கோட்பாடு இச்சமுதாயத்தில் இடம் பெறவில்லை. சொத்துடைமை என்ற கருத்து நிலவினால் அது குலக்குழுவினர் அனைவருக்கும் பகிர்ந்துக்கொள்ள வேண்டும் என்பதே இவ்வகைச் சமுதாயத்தின் நிலைப்பெற்றுள்ள கோட்பாடாகும். (பக்தவத்சலபாரதி. 2005-289-90)

ஒரே இடத்தில் வாழ ஆரம்பத்தில் மனிதன் தங்களுக்குள் இனக்குழுக்களை ஏற்படுத்தினான். நிலவுடைமை, பெண்ணுடைமை என்ற இரண்டு உடைமைப் பொருட்களும் ஆதிகாலச் சமூகத்தில் இன்றியமையாதன. பண்டைத் தமிழ்ச் சமுதாயம் தொடக்ககாலத்தில் இனக்குழுச் சமுதாயமாகத் தொழில்வழிச் சமூகப்பிரிவுகள் கொண்டதாக மாறியது. அங்ஙனம் மாறிய பின்னரும் பழைய இனக்குழுச் சமூகக் கூறுகள் நீடித்தன. (தட்சணாமூர்த்தி. அ. காவியா இதழ்)

முன்னோரையும் மொழியையும் நிலப்பரப்பையும், ஒன்றுபட்ட பண்பாட்டையும், வரலாற்றையும் உடைய மனிதர்களே இனக்குழுவாகும். ஒரு மனிதன் நவீன நாகரீக நிலையை அடைந்த ஒருவன் தன் வாழிடம், தாம் சார்ந்த சமுதாயம் போன்ற வழக்குகளையே முன்னிறுத்துவான்.

சமுதாயத்தின் அமைப்பு, பண்பாட்டு அமைப்புகள், மனிதர்கள் வாழும் இடங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக இனக்குழு அமைகிறது. இக்குழுவினர் ஒரு முழு கட்டமைப்பினை உடைய சமூகப் பண்பாட்டு வாழ்வினை மேற்கொண்ட போது, இச்சமூகத்தை நடத்திச்செல்லும் வகையில் குழுத்தலைமைகள் அமைகின்றன.

வினையே ஆடவர்க்கு உயிர் என்னும் பொருண்மைக்கிணங்க, குழுத்தலைமைகள் பொருளீட்டும் வழக்கத்தை மேற்கொண்டன. ஐந்திணைக்குடி மாந்தர்களின் வாழ்வியல் தேவைகளுக்கு தலைமைகளே பொருளீட்டும் பொறுப்பை பெற்றுள்ளன. அவ்வாறு அமையும் தலைமைகளின் பண்புகளை சங்கஇலக்கியங்கள் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

இனக்குழுச் சமூகங்கள் தங்களது வளர்ச்சியில் இடப்பெயர்வு, தொழில்முறை, உறவுமுறைக் களப்பு, மோதல்கள் ஆகியவற்றாலும், கால மாறுதல்களினாலும் சில தனித்த அடையாளங்களைக் கைக்கொண்டு பின்பற்றுகின்றன. சில இனக்குழுக்கள் தமது பழமை தனித்துவங்களை இழக்கின்றன. சில தமது தனித்துவங்களைப் பிறவற்றுடனான கலப்பினால் துணிவுடன் இயங்குகின்றன. ஆக, இப்படி சில அரசு, சமயம், கால மாற்றம் போன்றவற்றால் திரிபு நிலைக்கு உள்ளாகின்றன. சில இவ்வாறான தாக்குதலினின்றும் தன் தனித்துவத்தை விடாமல் பின்பற்றும் இனக்குழுச் சமூகங்களிடையே ஏற்பட்ட மாறுதல்கள் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களையும், அரசியல், சமூக, சமயச் சூழல்களின் தாக்கத்தையும் நவீன உலகை நோக்கிய மனித அறிவின் விரிவாக்கத்தையும் இவ்வாறான சூழல்களிலும் அடையாளத்தைக் காக்கும் இனக்குழுத் தன்மையின் தனித்துவப் பண்பையும் காட்டுவனவாகும்.

சமூக நிறுவனங்கள் காலந்தோறும் மாறுதல்களுக்கு உட்பட்டவை. மாறுகின்ற அடிப்படைகளைச் சமூக நிறுவனங்கள் பெற்றுள்ளன என்பது சமூகவியல் அறிஞர்களின் கருத்தாகும். (சமூகவியல். மேல்நிலை முதலாமாண்டு .152).

எனவே, இனக்குழுச் சமூகம் தமிழக வரலாற்றின் முக்கியத்துவம் உடையதாகும். படிப்படியாக மனித முன்னேற்றப் பாதையை வகுத்தளித்ததில் இனக்குழுக்கள் சிறப்புபெறுகின்றன. இனக்குழுக்களும் தலைமைகளும் நிறைவான வாழ்வியலைக் கட்டமைத்துள்ளனர்.

இனக்குழுச் சமுதாயம்

சங்ககாலத் தொடக்கத்தில் பல இனக்குழுக்கள் தமிழகத்தில் இருந்தமைக்குச் சான்றுகள் பல உள்ளன. தலைவன் ஒருவனும் அவனைச் சுற்றிய சிறு கூட்டமும் அமைந்த இனக்குழுக்கள் பிரிந்து கிடந்தன. இவ்வினக்குழுக்களைச் சிறுகுடி, சீறூர் எனும் பெயரால் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. புன்செய் சூழந்துள்ள அழகிய குடிமக்கள் வாழும் சீறூரில், இடையன் கொளுத்திய விளக்கொளியில் பாணர் சூழ்ந்திருக்க நாணுடை நெடுந்தகை வீற்றிருந்தான் என்று (புறம்.324) கூறுகின்றது. நெடுந்தகை காக்கும் குடிகள் வாழும் சீறூர், இல்லை என்று இரந்து நின்றவருக்கு, ஈயும் தன்மையும் வளமையும் உடையது. (புறம்.329).

சீறூர் மன்னன் எனும் சொல்லாட்சி, இனக்குழுத் தலைவர்களைக் குறிப்பதாகும். இச்சொல்லாட்சியும் புறநானூற்றுப்பாடல்கள், 197, 299, 308, 319, 328 ஆகியவற்றில் வருகின்றது.

“சிறுகுடி” எனும்சொல் இனக்குழு அமைப்புடைய சிறுகூட்டங்களைக் குறிப்பதாகும். சங்க இலக்கியத்தில் 49-இடங்களில் சிறுகுடி எனும் சொல் வந்துள்ளது. அவற்றில் அகநானூற்றில் 15 இடங்களிலும், நற்றிணையில் 20 முறையும் குறுந்தொகையில் 9 முறையும், கலித்தொகையில் 3 முறையும் பயின்று வருகின்றது.

அடு புலி முன்பின், தொடு கழல் மறவர்
தொன்று இயல் சிறுகுடி மன்று நிழற் படுக்கும்
அண்ணல் நெடு வரை **(அகம். 75)**

முரம்பு அடைந்திருந்த மூரி மன்றத்து,
அதர் பார்த்து அல்கும் ஆ கெழு சிறுகுடி **(அகம். 103)**

என்று அகநானூறு கூறும். “சிறுகுடி” பற்றிய செய்திகள் கீழ்க்காணும் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. (அகம்.7, 110, 192, 229, 232, 250, 284, 300, 312, 315, 318, 320, 351)

கல் முகைத் ததும்பும் பல்மலர்ச்சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட்டு குறுமகள் **(குறுந். 93)**

பரு இலைக் குளவியொடு பகமரல் கட்கும்
காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென **(குறுந். 100)**

மேலும், 108, 145, 184, 228, 232, 355, 373 ஆகிய குறுந்தொகைப் பாடல்களில் “சிறுகுடி” இடம்பெற்றுள்ளது. சிறுகுடி பற்றி நற்றிணை பின்வருமாறு உரைக்கின்றது.

காணல் அம் சிறுகுடிக் கடல் மேம் பரதவர். **(நற். 4)**

படு சுடர் அடைந்த பகு வாய் நெடு வரை
முரம்பு சேர் சிறுகுடி **(நற். 33)**

மறுகுதொறு புலாவும் சிறுகுடி அரவம்
வைகிக் கேட்டுப் பையாந்திசினே **(நற். 114)**

நறுவீய நனஞ் சாரல் சிலம்பலின், கதுமென, சிறுகுடி துயில் ஏழுஉம் சேண் உயர் விறல் வெற்ப (கலி. 45) சுற்றத்தார் அவ்விடத்தே உள்ள சிறுகுடியின் மன்றத்தின்கண் பண்ணமைந்த, இனிய தாளத்திற்கேற்ற குரவைக் கூத்து நிகழ்த்துவர், தேன்மிக்க பொதியை மலையை உடையவனின் சிறுகுடியில் வாழக்கூடியவர்கள் ஆயர்கள்,

முறுவலாள் மென்தோள் பாராட்டி, சிறுகுடி
மன்றம் பரந்தது உரை **(கலி. 102)**

ஆங்கு உணரார் நேர்ப அது பொய்ப்பாய் நீ ஆயின்
தேம் கொள் பொருப்பன் சிறுகுடி எம் ஆயர் **(கலி. 108)**

என்று கலித்தொகை உள்ளிட்ட சங்க இலக்கிய அடிகள் இனக்குழுப் பற்றிக் கூறுகின்றது.

இனக்குழுத் தலைமைகள்

தலைமைகளின் வழிக்காட்டுதலின் பெயரிலே இனக்குழுக்கள் இயங்கியுள்ளது. நானில மக்கள் தங்கள் ஊர்தோறும் தங்களுக்கேற்ற தலைவனொருவனது காவலின் கீழ் அடங்கி வாழ்ந்தார்கள். குறிஞ்சி நிலத் தலைவன் வெற்பன் என்றும், முல்லை நிலத் தலைவனைக் குறும்பொறை நாடன் என்றும், மருதநிலத் தலைவனை ஊரன் என்றும் நெய்தல் நிலத் தலைவனைத் துறைவன் என்றும் வழங்குதல் மரபு. இத்தலைமக்களால் ஆளப்படும் சிற்றூராட்சியே முதன்முதலில் தோன்றியது. ஒவ்வொரு சிற்றூர் மக்களும், தங்களால் நன்கு மதிக்கப்படும் அறிவும் ஆற்றலும் உடைய தலைமகன் ஒருவனது சொல்லுக்கு அடங்கி, அவனது காவலில் அச்சமின்றி வாழப்பழகினர். அவ்வகையில் சிறுகுடிகள், இனக்குழுத் தலைவர்கள் பெயர்களால் அழைக்கப் பெற்றனர்.

வாணன் சிறுகுடி, பண்ணன் சிறுகுடி, அருமன் சிறுகுடி என்று வழங்கப்பட்டதை சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. “வாணன் சிறுகுடி” என்னும் ஊர், நெடிய அடிப்பகுதியை உடைய மாமரத்தினின்றும் முறையாக முற்றிக் கனிந்து உதிர்ந்த வெள்ளிய பழத்தை வளைந்த காலினையுடைய யாமை தன் பார்ப்போடு கவர்ந்து உண்ணும் பொய்கைகள் சூழ்ந்தது, பொய்யாத புதுவருவாயைக் கொண்டது. அவ்வூர்க்கு வடபாலுள்ள இனிய நீரினையுடைய காட்டாற்றினை உடையது. சிறுகுடி காவிரியின்

வடபால் உள்ள இவ்வூர் வாணன் என்பானுக்கு உரியது; கடற்கரைச் சோலை சூழ்ந்தது; நீர் வளஞ்சான்ற நெல் வயல்களைக் கொண்டது. இதனை,

கொடுந் தாள் யாமை பார்ப்பொடு கவரும்
பொய்கை சூழ்ந்த, பொய்யா யாணர்,
வாணன் சிறுகுடி வடாஅது
தீம் நீர்க் கான்யாற்று அவிர்அறல் போன்றே (அகம். 117)

காய்நெற் படப்பை வாணன் சிறுகுடித், தண்டலை (அகம். 204)

பெரு நீர்க் கானல் தழீஇய இருக்கை
வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்,
.யாணர்த் தண்பணை (அகம். 269)

என்று அகநானூறும்,

பிற ஊர்களினும் சிறந்தது வாணனுடைய சிறுகுடி
வாணன் சிறுகுடி அன்ன, என் (நற். 240)

என்று நற்றிணையும், வாணன் சிறுகுடி எனும் குழுத்தலைமை குறித்து கூறுகின்றது.

பண்ணன் சிறுகுடி

பண்ணன் என்பவன் தனக்கென வாழாது பிறர்க்கெல்லாம் உரிய குழுத்தலைமைப் பண்பினை உடையவன். இவனது சிறுகுடி அவனது ஊராகும்.

தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை (அகம். 54)

என்று அகநானூறு கூறுகின்றது.

அருமன் சிறுகுடி

காக்கைகள் கவர்ந்துக் கொள்ளுமாறு கரிய கண்ணையுடைய கருணைக் கிழங்கின் பொரியலோடு செந்நெல்லாற் சமைத்த வெண்மையான சோற்றுப்பலியைத் தெய்வத்திற்கிடுவர். அவ்வாறு தெய்வத்திற்கு இடும் குறுகிய கால்களை உடையது, மிக்க உணவுப் பொருட்களை உடையதுமான நல்ல மனைகள் பலவாக அமைந்த பழமை மிக்க சிறுகுடி என்னும் ஊர் என்று கூறுவதால், அருமனின் குழுத்தலைமையின் பண்பை உணரமுடிகிறது. இச்சிறுகுடியின் தொன்மை குடிச்சிறப்பு விருந்தோம்பல் என்பதையும் அறியமுடிகிறது. சான்று,

கருங் கண் கருணைச் செந்நெல் வெண் சோறு
தூருடைப் பலியொடு கவரிய, குறுங் கால்
கூழுடை நல் மனைக் குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேர் இசைச் சிறுகுடி. **(நற். 367)**

என்று நற்றிணை கூறுகின்றது.

ஆதி அருமன் மூதூர். **(குறுந். 293)**

என்று அருமன் சிறுகுடி என்னும் பழமையான ஊர் சிறப்பு உடையது என்று குறுந்தொகை கூறுகின்றது.

எனவே, பண்டைத் தமிழகத்தில் சிறு சிறு இனக்குழுக்கள் இருந்தமையையும் அவற்றுள் சில தலைவன் பெயரால் அழைக்கப் பெற்றமையையும் உணர்த்துகின்றன. இவை மட்டும் இல்லாமல் அதியர் குடி, ஆய்குடி, வேளிர்குடி போன்ற குறு நில அமைப்புகளும் இருந்தமையை சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

இனக்குழுவின் மாற்றுருவாக்கம்

சங்ககாலத் தமிழகத்தின் அரசியல், உரிமை வாழ்வினை வளர்த்தற்குரிய வேலியாக விளங்கியது. சிறுகுடி, சீறூர் முதலிய அமைப்புகள் திட்டுத்திட்டாக இருந்தன. அதனால், அக்காலத் தமிழ் மக்கள் பசியும் பிணியுமற்று, நல்ல வாழ்வினை வாழ்ந்தனர். வேட்டையாடி வரும் பொருள்களையும், விளைப்பொருள்களையும் பொதுவாகப் பங்கிட்டு வாழ்ந்து வந்தனர். இங்கு மக்கள் கூட்டமும் குறைவு இடத்தின் பரப்பளவும் குறைவாக காணப்பட்டது; உடல் வலிமையும், உள்ள வலிமையும், அறிவு வலிமையும் பெற்ற ஒருவன் இக்குழுக்களுக்குத் தலைவனாக விளங்கினான். மக்கள் கூட்டம் குறைவாக இருந்தமையால் அவர்களை ஆள்வது அவனுக்கு எளிதாக இருந்தது.

இந்த இனக்குழு அமைப்பு ஒரு காலக் கட்டத்தில் சிதையத் தொடங்கியது. இக்குழுக்களுள் வலிமை வாய்ந்த ஒன்று, பிற குழுக்களை வென்று தன்னுடன் இணைத்துக் கொள்வதற்குக் காரணமாக அமைந்தது. இனக்குழுக்கள் அரசு அமைப்பின் கீழ் வந்தமைக்குத் தலையாலங்கானத்துப் போரைச் சான்றாகக்கொள்ளலாம். சேர, சோழ மன்னர்களையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய குழுத்தலைவர்களையும் தோற்கடித்த பாண்டியன் நெடுஞ்செழியன், இடப்பரப்பு அளவிலும் மக்கள் தொகை அளவிலும் மிகுதி உடைய ஓர் அரசை நிறுவியிருக்க வேண்டும். இப்போர் வெற்றியை நக்கீரர், பாண்டியன் நெடுஞ்செழியன், கத்திரிகையில் நறுக்குண்ட பிடரிமயிரினையுடைய குதிரைகள் பூட்டப்பெற்ற கொடி அசைந்தாடும் தேரினை உடையவன்; அவன், தலையாலங்கானம் என்னும் ஊரின்

பரந்துபட்ட இடமெல்லாம் சிவக்குமாறு சேரன், சோழன், சினம் மிகுந்த திதியன் போரில் வலிமையான யானைப் படைகளையுடைய பொன்னாலான பூண் அணிந்த எழினி, பன்னாடையால் அரிக்கப்பெற்ற கள்ளினையுடைய எருமையூர்க்குத் தலைவன், மார்பிலே பூசிப் புலர்ந்த தேன் மணங்கமழும் சந்தனத்தையுடைய இருங்கோ வேண்மான், விரைந்து செல்லும் தன்மை வாய்ந்த தேரினையுடைய பொருநன் எனக் கூறப்பட்ட எழுவரையும் போரிலே வென்றான்; அவர்களுடைய வலிமையெல்லாம் அடங்குமாறு ஒருநாள் ஒரு பகலிலே அவர்தம் முரசமோடு வெண்கொற்றக் குடைகளையும் ஒருசேர வயப்படுத்திக் கொண்டான். தன் வெற்றிப் புகழ் பெற்று, பகைவரது படைகளைக் கொன்று களவேள்வி செய்த காலத்துச் செழியனின் வெற்றி சிறப்பிக்கப்பட்டது.

கொய் சுவல் புரவிக் கொடித் தேர்ச் செழியன்
ஆலங்கானத்து அகன் தலை சிவப்ப,
சேரல், செம்பியன், சினம் கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம் பூண் எழினி
நார் அரி நறவின் எருமையூரன்,
தேம் கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல் தேர்ப்பொருநன், என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒரு பகல்
முரைசொடு வெண்குடை அகப்படுத்து, உரை செல,
கொன்று, களம் வேட்ட ஞான்றை,
வென்றி கொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே (அகம். 36)

என்று அகநானூற்றுப் பாடல் விளக்குகிறது. மேலும், அகநானூற்றுப்பாடல் 175 ஆம் பாடல் மற்றும் நற்றிணை 387 ஆம் பாடலும் இனக்குழுக்கள் அரசு அமைப்பின் கீழ் வந்தமைக்குத் தலையாலங்கானத்துப் போர் காரணமாக அமைந்ததை உணர்த்துகின்றன. தமிழகத்தில் சங்ககால இறுதியில் மதுரையை மையமிட்ட ஒரு விரிந்த அரசு உருப்பெற்றிருந்தமையை பின் வரும் சான்றுகளால் அறியமுடிகிறது.

1. மதுரையை மையமிட்ட சங்க இலக்கியப்படைப்புகள் மதுரைக் காஞ்சி, கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்கள், மதுரையை அரசுத் தலைநகராக வருணனை செய்கின்றன.
2. மதுரையைச் சுற்றியுள்ள பகுதியில்தான் கூடுதல் எண்ணிக்கையிலான சங்க காலக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

3. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துப் போரில் எழுவரை வென்று விரிந்த அரசொன்று உருவாகக் கால்கோள் செய்திருக்கக்கூடும்.
4. களப்பிரர்கள் மதுரையைக் கைப்பற்றிய பின்னர், தமிழகம் முழுவதும் அவர்தம் ஆட்சிக்கு ஆளாகியது. இது, தமிழகத்தில் மதுரை பெற்றிருந்த முதன்மையையும் உய்த்துணர வைக்கிறது. (சிலம்பு. நா. செல்வராசு. பக்:69-70)

சங்ககாலக் கல்வெட்டுகள் 22 இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றுள் 17 இடங்கள் மதுரையை மையமிட்ட இடங்களாகும் என்கிறார் க.ப. அறவாணன். (சைனரின் தமிழிலக்கண நன்கொடை. 36)

மேலும், மதுரையை ஆண்ட பாண்டியனின் தலையாலங்கானத்து அரசுருவாக்கம் பற்றிய புறச்சான்றுகள் நிரம்பக் கிடைக்கின்றன. இச்சான்றுகள் யாவும் மதுரையை மையமிட்ட விரிந்த அரசு ஒன்று சங்க கால இறுதியில் தோன்றியதைப் புலப்படுத்துகின்றன.

எஞ்சிய இனக்குழுக்கள் அரசோடு முட்டி மோதி இணைந்திருக்க வேண்டும். இனக்குழுக்களுக்கும், அரசுக்கும் தொடர்ந்து போர் நடந்து வந்ததை சங்க இலக்கியம் பலவாறு சான்று பகர்கின்றன. மகள் மறுத்து மொழிதல் என்னும் புறத்துறை மறைமுகமாக இனக்குழுக்கள் அரசோடு இணைந்தமையை விளக்குகின்றன. இனக்குழுத்தலைவனது மகளை, மன்னர்கள் திருமணம் செய்து கொள்வதன் மூலம் அக்குழுக்கள் அரசோடு இணைக்கப்பெற்றன.

அரசு உருவாக்கமும் சமூக மாற்றமும்

அரசு என்னும் சமூக நிறுவனம் பெரிய அளவில் உருப்பெற்ற போது மூன்று பிரிவினர் பெரும் திறனுடன் தமிழகத்தில் தோன்றலாயினர். இனக்குழு ஆட்சி அமைப்பிற்கும் விரிந்த அரசு ஆட்சி அமைப்பிற்கும் பெரும் வேறுபாடுகள் உண்டு. மக்கள் தொகையின் பெருக்கம், இடபரப்பளவின் கூடுதல் முதலியன அரசு அமைப்பில் அடித்தளங்களாக அமைந்தன. அவ்வாறு அமைந்த பல்வேறு இனக்குழு மக்கள் அனைவரையும் ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவது தேவையாயிற்று; கட்டாயமாயிற்று. இம்மக்கள் தத்தம் தலைமையை விடுத்துக் குறிப்பிட்ட அரசன் ஒருவனை ஏற்க வேண்டுமாயின் அரசத் தலைமை இறைமையோடு தொடர்புடையதாகக் கற்பிக்கப் பெறுதல் வேண்டும். அப்பொழுதான் அரசத் தலைமை மதிக்கப்பெறும் மக்களால் ஏற்கப்பெறும்.

இனக்குழு அமைப்பில் தலைமை எப்பொழுதும் வலிமையும் அறிவுக் கூர்மையும் உடையதாக இருந்தது. அரசு, தலைமுறைச் சொத்தாக்கப் பெற்றபோது வலிமையும்,

அறிவுக் கூர்மையும் பாரம்பரியத்தைத் தந்து விடமுடியாது. அவ்வாறு வலிமையும், அறிவுக்கூர்மையும் தரவில்லை என்பதால் வலிமைக்குத் தளபதிகளும் அறிவுக்கூர்மைக்கு அமைச்சர்களும் தோன்றினர். இதனை எண் பேராயம் ஐம்பெருங்குழு ஆகிய அமைப்புகள் விளக்குகின்றன. இந்த அரசு அமைப்பு மக்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முயன்றது. இம்முயற்சியில் சமயங்களும், ஆரியப் பண்பாடும் பங்கெடுத்துக் கொண்டன. பங்கேற்கவே சமய ஆரியப்பண்பாட்டுக் கலப்புத் தோற்றம் பெற்றன.

அரசு தோற்றத்தால் ஏற்பட்ட மாற்றங்கள்

அரசு தோற்றத்தால் பொருளாதார உற்பத்தி பெருகிய உற்பத்திக்கு ஒருசிலர் உரிமையுடையவராக மாறினர். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உள்ள இனக்குழுக்கள் இணைந்தபோது ஏற்றத்தாழ்வுகள் மறைந்தன. உழைப்புச்சக்தி பெருகியது. மருத நில வருவாய் ஒருபுறம் நிற்க, நாட்டின் விரிந்த பரப்பளவால் வணிகம் செழித்து வளர்ந்தது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு உற்பத்திப் பொருளைக் கொண்டு செல்வது எளிமையானது. இதற்கு போக்குவரத்துச் சாலை அமைப்புகள் துணையாக அமைந்தன. இனக்குழு அமைப்பின் எல்லைகளின் தடுப்புகள் உடைக்கப்பெற்றதால் வணிகர்கள் நீண்ட தொலைவு சென்று பொருளீட்ட முயற்சித்தனர். கடல் தாண்டிய வாணிபம் சங்க காலத்தில் நிகழ்ந்தது தெளிவுப்படுகிறது. இதனால், செல்வ வளம் ஒரே இடத்தில் குவியத் தொடங்கியது. அரசனுக்கு இணையான செல்வ வளம் படைத்தவர்கள் சமுதாயத்தில் தோன்றினர். அவ்வாறு தோன்றியதால் மேல்நிலையில் இருந்த அரசரும் செல்வந்தர் பிறரும் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர்.

மேல்மட்ட பண்பாட்டுத் தோற்றம்

இனக்குழுக்கள் இணைந்து அரசு உருப்பெற்றபோது அரசப்பிரிவு, வணிகப்பிரிவு வலிமைப்பெற்றதோடு இவற்றை முறையுறுத்த எழுந்த அந்தணப் பிரிவும் நிலைப்பெற்றது. இதன் விளைவாக அரசன் கடவுளரோடு இணைத்துப் பேசப்பெற்றான். நிலையான படை அமைப்பு தோன்ற மறவர்களின் தியாக மனப்பான்மை தேவையாயிற்று. இதனால் வீரசொர்க்கம் பற்றிய சிந்தனைகள் தோற்றம் பெற்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்த மறுபிறப்புச் சிந்தனைகள் வேண்டிதாயிற்று. இவை யாவற்றையும் தமிழினத்தவர்கள் ஏற்றுக் கொண்டனர். அரச இனமும் வணிக இனமும் பிறப்பு வழியே தம் உரிமையை நிலைநாட்ட விரும்பின. எனவே தொழில்வழி இனப்பிரிவுகள் நிலவிய தமிழகத்தில் பிறப்பு வழிப் பிரிவுகள் ஏற்பட்டன. அரசர், அந்தணர், வணிகர் ஆகிய வருணாசிரம முறை ஏற்கப் பெற்றமைக்கும் மறுபிறப்பு முதலிய கோட்பாடுகளைப் பரப்புவதற்கும் ஆரியர்

காரணிகளாயினர். எனவே ஆரியப் பண்பாடு எளிதாகத் தமிழகத்தில் கலக்கத்தொடங்கியது. ஆரியர்கள் அரசர்க்கும், வணிகர்க்கும் இடையே நின்று கீழ்மட்டச் சமூகத்தைத் துண்டித்தனர். இதனால் மேல்மட்டப் பண்பாடு பரவியது. பின்னாளில் அனைத்து மக்களும் மேல்மட்டப் பண்பாட்டைப் பின்பற்றினர்.

முடிவுரை

தமிழகத்தில் சமூக மாற்றங்கள் நிகழ தமிழ்ச் சமுதாயம் தானே இடம் கொடுத்தது என்பதை உணரமுடிகிறது. சமூக மாற்றத்தை விளைவிக்கும் காரணிகளாக சமுதாயச் சிந்தனையாளர்கள் பின் வரும் காரணங்களைக் கூறுகின்றனர். பாரம்பரியம், சூழ்நிலை, இனம், பண்பாடு, நாகரிகம், சமூகத்தரப்பிரிவு ஆகியன சமூக மாற்றக்காரணிகளாகக் கருதத்தகுவன. பெற்றோர்களிடமிருந்து குழந்தைகள் உயரியப் பண்புகளையும் உள்ளப் பண்புகளையும் பெறுவது உற்பத்திச் செய்கையின் இயல்பான போக்காகும். இவ்வாறு பரம்பரையாகப் பெற்ற பண்புகளின் முழுமையை பாரம்பரியம் என்பர். ஒரு பொருளைச் சூழ்ந்திருந்து பாதிக்கின்ற தன்மையை சூழ்நிலை என்பர். இது, இயற்கைச் சூழ்நிலை, செயற்கைச் சூழ்நிலை, சமூகக் சூழ்நிலை, உளவியல் சூழ்நிலை என நான்கு வகைப்படும். மார்க்சியக் கொள்கை பொருளாதாரச் சூழ்நிலைக்கு முதன்மை கொடுக்கிறது. பாரம்பரியத்திற்கும், சூழ்நிலைக்கும் இடைப்பட்ட ஒரு பிரச்சனையான இனம் என்பதை அறிஞர் கருதுவர். பாரம்பரியத்தின் மூலம் வழி வழியாகக் கொண்டு செல்லப்படக்கூடிய புலனாகக் கூடிய பொதுவான உடற்கூற்று அமைப்புப் பண்புகளை உடைய மனிதக் குழுவே இனம் எனப்படும். மனிதன் தன்னுடைய குறிக்கோள்களை அடைய மற்றும் உருவாக்கிய பொருள் சார்ந்த, பொருள் சாராத வினைத்திட்டங்கள் ஆகியவை பண்பாடு எனப்பெறும். மனிதன் தன் ஆழ்ந்த விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய தொழில்துறை, பொருளாதாரம், அரசியல், பல்வேறு வினைத்திட்டங்கள் முதலியவற்றின் முழுமையே நாகரிகம் என்பதையும் அறியமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1. உ வே, சாமிநாதையர். *குறுந்தொகை*. சென்னை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1955.
2. உ வே, சாமிநாதையர். *ஐங்குறுநூறு*. சென்னை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1949.
3. ச வே, சுப்பிரமணியன். *சங்க இலக்கியம் (மூலமும் தெளிவுரையும்)*. தொகுதி 2., சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 2010.
4. அ, தட்ணாமூர்த்தி, உரையாசிரியர். *ஐங்குறுநூறு*. சென்னை, நியு செஞ்சுரி பின்னத்தூர், 2004.

5. நாராயணசாமி ஐயர், உரையாசிரியர். *நற்றிணை.* சென்னை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1952.
6. வேங்கடசாமி நாட்டார், உரையாசிரியர். *அகநானூறு.* சென்னை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1946.
7. துறைசாமிப் பிள்ளை, உரையாசிரியர். *ஐங்குறுநூறு (மூலமும்தெளிவுரையும்).* சென்னை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 2004.
8. நா, செல்வராசு. *சங்க இலக்கிய மறுவாசிப்பு.* சென்னை, காவ்யா இதழ், 2009.
9. தேவநேயப்பாவாணர். *தமிழர் வரலாறு.* சென்னை, திருநெல்வேலி, தென்னிந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1991.
10. வெள்ளைவாரணார். *சங்க காலத் தமிழ் மக்கள்.* சென்னை, நேஷனல் பப்ளிகேஷன் கம்பெனி, 1950.
11. தமிழ்நாட்டு வரலாறு. *பல்லவர்-பாண்டியர் காலம் (கி.பி.500-900வரை).* முற்பகுதி., சென்னை, தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ் நாடு அரசு வெளியீடு, 1990.
12. சீ, பக்தவத்சல பாரதி. *பண்பாட்டு மானிடவியல்.* சிதம்பரம், மெய்யப்பன் ஆய்வகம், 1990.
13. சீ, பக்தவத்சல பாரதி. *தமிழர் மானிடவியல்.* திருச்சி. அடையாளம் பதிப்பகம், 2002.

REFERENCES

1. U V, Swamynathaiyar. *Kurunthokai*. Chennai, Thirunelveli, South Indian Publication Corporation, 1955.
2. U V, Swamynathaiyar. *Aingurunuru*. Chennai, Thirunelveli, South Indian Publication Corporation, 1949.
3. S V, Supramaniyan. *Sangam Elakkiyam*. Chennai, Manivasagar Publication, 2010.
4. A. Thatchanamoorty. *Aingurunuru*. Chennai, New century Pinnathur, 2004.
5. Narayanasamy Iyar. *Natrinai*. Chennai, Thirunalveli, South Indian Publication Corporation, 1952.
6. Vengatasamy Naattar. *Agananooru*. Chennai, Thirunalveli South Indian Publication Corporation, 1946.
7. Thuraisamippillai, Text Editor. *Ingurunooru*. Chennai, Thirunalveli South Indian Publication Corporation, 2004.
8. N, Selvarasu. *Sanga Elakkiya Maruvasippu*. Chennai, Kaaviya Journal, 2009.
9. Thevaneyappaavanar. *Thamizhar varalaru*. Chennai, Thirunalveli, South Indian Publication Corporation, 1991.
10. Vellaivaranar. *Sangakala Thamizh Makkal*. Chennai, National Publication Company, 1950.
11. History of Tamil Nadu. *Pallavar-Pandyan period (500-900AD)*. First Part., Chennai, Tamil Nadu Historical Organization, Tamil Nadu Government Publication, 1990.
12. S, Bakthaychalabharathi. *Panpattu manitaviyal*. Chidambaram, Meyyappan Publications, 1990.
13. S, Bakthaychalabharathi. *Tamizhar maanidaviyal*. Tiruchy, Ataiyalam Publications, 2002.